بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

# விருந்தினர்களாக இருந்தாலும் சரி; விருந்து உபசரிப்பு செய்பவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் தமது சிறந்த நல்லொழுக்கதை வெளிப்படுத்த வேண்டும். ஆனால் எவர்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு தொண்டாற்றுவதற்காக தம்மை அர்ப்பணித்துள்ளார்களோ அவர்கள் அதை விட அதிகமாக சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 03 ஆகஸ்ட் 2018** அன்று ஆற்றிய **ஜும்ஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், அவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ்வின் அருளால் இன்று நாம் இன்னொரு ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நற்பேற்றை பெறுகின்றோம். ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அனைவரும் இந்த மூன்று நாளின் ஆன்மீக சூழலிலிருந்து பயனடைய முயற்சி செய்ய வேண்டும். ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளை அமைதியாகவும், கவனமாகவும் கேட்க முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் ஆண்டு மாநாட்டில் பங்கு பெற்றதற்கான பயனைப் பெற முடியும்.

ஆண்டு மாநாட்டின் பணிகளில் குறைகளும், பலவீனங்களும் ஏற்பட்டு விடுகின்றது. எங்கு பணியாளர்கள் தத்தமது பணிகளை ஆய்வு செய்து அதனை சரி செய்வதற்கு முயற்சி செய்பார்களோ அங்கு விருந்தினர்களும் இந்த குறைகளையும், பலவீனங்களையும் கண்டும் காணாமல் பொறுத்துக் கொள்ள வேண்டும். எங்கு பணியாளர்களுக்கு உதவிக்கான தேவையுள்ளதோ அங்கு அவர்கள் தாமே முன் வந்து அவர்களுக்கு உதவி செய்ய முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் நம்மிடம் ஒற்றுமை ஏற்படும். எனவே இந்த அடிப்படையான விஷயத்தை விருந்தினர்களும், விருந்து உபசரிப்பு செய்பவர்களும் நினைவில் வைக்க வேண்டும்.

இப்போது நான் விருந்தினர்களுக்கும். விருந்து உபசரிப்பு செய்பவர்களுக்கும் சில விஷயங்களின் பக்கம் கவனமூட்டுவேன். முதலாவதாக பணியாளர்களிடம் நான் கூறுகின்றேன். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் அல்லாஹ்வின் கட்டளைகேற்ப துவக்கப்பட்ட இந்த ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்துள்ளவர்களுக்கு தொண்டு செய்வதற்காக தம்மைத்தாமே அர்ப்பணித்துள்ளனர். அவர்கள் ஏதோவொரு உலக கேளிக்கைகளில் கலந்து கொள்வதற்காக வரவில்லை.

மாறாக, அவர்கள் தமது ஆன்மீக நிலைமையையும், அறிவு மற்றும் நல்லொழுக்கங்களை மேம்படச் செய்வதற்காக வருகை தந்துள்ளனர். மேலும் நான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்களது எண்ணங்கள் இதுவாகவே இருக்கும் என்று நம்புகின்றேன். அவ்வாறு தான் இருக்கவும் வேண்டும். இல்லையென்றால் அவர்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வது வீணானதாகும். எவ்வாறிருப்பினும், பணியாளர்கள் எப்போதும் இதனை நினைவில் வைக்க வேண்டும். அதாவது விருந்தினர்கள் எப்படி நடந்து கொண்டாலும் சரி, பணி செய்யக் கூடியவர்கள் சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படத்தியவாறு அவர்களது உணர்வுகளை கருத்தில் கொள்ள வேண்டும். அப்போது தான் அல்லாஹ்வின் திருப்தியை பெறக் கூடியவர்களாக நாம் ஆக முடியும்.

நாம் எந்த நபியை ஏற்றுக் கொண்டுள்ளோமோ அந்த நபியின் முன்மாதிரி விருந்தினர்கள் தொடர்பாக எவ்வாறு இருந்தது? நகரத்தில் வசிக்கக்கூடிய அந்த மக்கள் தினமும் அன்னாரை சந்திக்கக் கூடியவர்களாக இருந்தனர். அவர்களை அவர்களது ஏழ்மையின் காரணமாக உணவு உண்பதற்காக அழைத்தால் அல்லது சாதராணமாக உணவு உண்பதற்கு அவர்களை அழைத்தால் அவர்கள் நீண்ட நேரம் பேச அமர்ந்து விடுகின்றனர். அது அன்னாரது ஓய்விற்கும் பணிக்கும் இடையூறாக இருந்தாலும் அன்னார் ஒருபோதும், குறித்த நேரத்திற்கு முன்பு வாருங்கள். நான் பிஸியாக இருக்கிறேன் என்று கூறியதில்லை. மேலும் உணவு உண்ட பிறகு விரைவாக சென்று விடுங்கள். நீங்கள் அமர்ந்திருப்பதனால் நான் எனது சில பணிகளை செய்ய முடியாமல் இருக்கின்றேன் என்று அன்னார் கூறியதில்லை.

மக்களது இந்த நிலையையும், விருந்தினர்களிடம் அன்னார் காட்டும் பொறுமைக் கண்டு அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடம், ஃப யஸ்தஹீ மின்கும் அதாவது அவர் உங்களது உணர்வுகளை கருத்தில் கொண்டு உங்களை தடுப்பதிலிருந்து வெட்கப்படுகின்றார். ஆனால் அல்லாஹ்விற்கு இதைக் கூற எவ்வித தடையுமில்லை. எனவே நீண்ட நேரம் நபியின் வீட்டில் அமர்ந்து அவருக்கு கஷ்டத்தை கொடுக்காதீர்கள்.

ஆக ஒரு புறம் அல்லாஹ் நபி (ஸல்) அவர்கள் உயர் தரமான சிறந்த விருந்து உபசரிப்பை பற்றியும், அவர்களது சிறந்த ஒழுக்கங்களைப் பற்றியும் கூறி விட்டான். மறுபுறம் விருந்தினர்களிடம், உங்களது உரிமைகள் என்று நினைத்து எல்லை மீறாதீர்கள். விருந்தினர்களுக்கான வட்டத்திற்குள் இருங்கள். அந்த வட்டத்திற்குள் இருக்க வேண்டியது அவசியமாகும் என்று கூறுகின்றான். எனவே விருந்தினர்கள் ஆகுமானதற்ற உரிமைகளை பெறக்கூடாது.

பிறகு அந்நியர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்வதில் அன்னாரது தரம் எவ்வாறு இருந்தது என்றால் அதைப் பார்த்து மனிதன் வியப்பில் ஆழ்ந்து விடுகின்றான். இதற்கான உதாரணத்தை நாம் பார்க்கின்றோம்.

முஸ்லிமல்லாத ஒருவர் விருந்தினராக வருகின்றார். அன்னார் அவருக்கு விருந்து உபசரிப்பு செய்கின்றார்கள். அவர் காலையில் எழுந்து செல்லும் போது படுக்கையை அசுத்தமாக்கி விட்டு சென்று விடுகின்றார். அன்னாரே அதை சுத்தப்படுத்துகின்றார்கள். சஹாபாக்கள் அன்னாரிடம், எங்களுக்கும் தொண்டு செய்வதற்கான வாய்ப்பை தாருங்கள். நாங்கள் இருக்கின்றோம். நீங்கள் ஏன் கஷ்டப்படுகின்றீர்கள் என்று கேட்கின்றனர். ஆனால் அன்னார், அவர் எனது விருந்தினர் ஆவார். எனவே நானே அதை சுத்தப்படுத்துவேன் என்று கூறுகிறார்கள். எனவே இத்தகு உயர் தரமான நல்லொழுக்கத்திற்கு எதிரில் எவராலும் போட்டி போட முடியாது.

நமது மாநாடுகளில் நம்மவர்களும் வருகின்றனர். அந்நியர்களும் வருகின்றனர். வரக்கூடிய அனைவரும் நல்லொழுக்கத்தில் சிறந்து விளங்குபவர்கள் ஆவர். அவர்கள் மார்க்கத்தை கற்றுக் கொள்வதற்காக வருகின்றனர். அல்லது இஸ்லாம் அஹ்மதிய்யத்தை அறிந்து கொள்வதற்காக வருகின்றனர். மனித பலவீனங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கின்றன. தவறுகள் நிகழ்ந்து விட்டாலும், யாராவது வரம்பு மீறியிருந்தாலும் அவர்கள் தீய நடத்தையுடையவர்கள் என்றோ அவர்களது எண்ணம் நல்லது அல்ல என்றோ நம்மால் கூற முடியாது. இது மனித பலவீனங்கள் ஆகும். இதன் காரணமாக சில நேரங்களில் தவறுகள் நிகழ்ந்து விடுகின்றது. அவ்வாறு நடந்து விட்டாலும் அதை பொறுத்துக் கொள்ள வேண்டும்.

அஹ்மதிகள் விருந்தினராகவோ அல்லது விருந்து உபசரிப்பவராகவோ இருந்தாலும் அவர்கள் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் எவர்கள் தம்மைத்தாமே விருந்தினர்களை உபசரிப்பதற்காக அர்ப்பணித்துள்ளார்களோ அவர்கள் மேலும் அதிகமான நல்லொழுக்கங்கள் வெளிப்படுத்த வேண்டும். பணியாளர்கள் தரப்பிலிருந்து பொறுமையும், நல்லொழுக்கங்கள் வெளிப்பட்டால் மற்றவர் தாமே வெட்கப்படுவார். எனவே தொண்டாற்றக்கூடிய ஒவ்வொருவரும் தத்தமது துறையில் சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

மேலும் இதை இன்றைய நாட்களில் ஒரு சேலஞ்சாக எடுத்துக் கொண்டு சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். அல்லாஹ் திருக்குர்ஆனில் இதன் பக்கம் கவனமூட்டியவாறு கூறுகின்றான். கூலு லின்னாஸி ஹுஸ்னா அதாவது மக்களிடத்தில் மென்மையாக பேசுவீராக. நல்ல முறையில் பேசுவீராக.

சண்டைகளை முடிவுக்கு கொண்டு வரவும், சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தவும் இது மிகவும் அடிப்படையான விஷயமாகும். இந்த வழிமுறை சில குறிப்பான சூழ்நிலைக்கு மட்டுமல்ல. மாறாக, எல்லா நேரத்திற்கும் உரியதாகும். மனிதனுக்கு இதற்கான பழக்கம் ஏற்பட்டு விட்டால் பிறகு ஒருபோதும் வரம்பு மீறுதலும், பகைமையும் உருவாகவே முடியாது.

எனவே விருந்தனர்களும், விருந்து உபசரிப்பு செய்பவர்களும் இங்கும், எல்லா நேரமும் அல்லாஹ்வின் இந்த கட்டளையை எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும். குறிப்பாக இன்றைய நாட்களில் இதனை கண்டிப்பாக செயல்படுத்துங்கள். இந்த சூழலை நாம் அனைவரும் ஒன்றிணைந்து மகிழ்ச்சிகரமானதாக ஆக்க வேண்டும். அந்த நோக்கமானது, நமது நல்லலொழுக்க, ஆன்மீக நிலைமைகளை சிறந்ததாக ஆக்குவதாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: எடையைப் பொருத்தவரை சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதை விட அதிக எடையைக் கொண்டது வேறு எந்த விஷயமும் கிடையாது.

மேலும் சிறந்த நல்லொழுக்கத்தை பெற்றிருப்பவர் தொழுகை மற்றும் நோன்பை முறையாக பேணக் கூடியவராகவும் இருப்பார். அதாவது நன்மை செய்வதற்கான நற்பாக்கியம் கிடைக்கின்றது. குறிப்பாக அல்லாஹ்வின் திருப்தியை நாடியவாறு நன்மை செய்ய பாக்கியம் கிடைக்கும் போதுதான் இறை வணக்கத்தின் பக்கமும் கவனம் ஏற்படுகின்றது.

எனவே மற்றவர்கள் எவ்வாறு நடந்து கெண்டாலும் பணி செய்பவர்களது முகத்தில் எப்போதும் புண்சிரிப்பு தென்பட வேண்டும். அவர்களது இந்த வெளிப்படையான நிலைமையின் தாக்கம் உள்ளத்திலும் ஏற்படும். மேலும் உள்ளத்திலும் எவ்வித கடுமையும் ஏற்படாது. உள்ளத்தில் எவ்வித கடுமையும் ஏற்படாத போது சில நேரங்களில் கோபத்தின் காரணமாக வழங்கப்படுகின்ற தவறான தீர்ப்பும் வழங்கப்படாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இந்த உயர் தரமான பண்பை எடுத்துக் கூறியவாறு ஒரு சஹாபி கூறுகின்றார்கள். நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட சிரித்த முகத்தை உடைய வேறு எவரையும் கண்டதில்லை.

பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இந்த போதனையையும் வழங்கினார்கள். அதாவது மென்மையை கைகொள்ளுங்கள். எவர் மென்மையை கைக்கொள்வதிலிருந்து விலகியுள்ளரோ அவர் நன்மையிலிருந்தும் விலக்கப்பட்டவராக இருக்கின்றார்.

இந்த விஷயத்தை விருந்தனர்களும், விருந்து உபசரிப்பு செய்பவர்களும் புரிந்து கொண்டால் இந்த ஆன்மீக சூழலிலிருந்து நன்மைகளையும், அருட்களையும் பெறக் கூடியவர்களாக ஆகி விடுவர்.

அத்தோடு நான் மாநாட்டில் கலந்து கொள்பவர்களிடமும் கூறுவேன். அதாவது நான் கூறியது போன்று ஆண்டு மாநாட்டின் இந்த மிகப்பெரிய ஏற்பாடுகள் தன்னார்வத் தொண்டர்கள் மூலமாகவே நடைபெறுகிறது. இவர்கள் நமது வேலையாட்கள் கிடையாது. இவர்களில் சிலர் மிகச்சிறந்த பொறுப்பை வகிக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்ற ஓர் உணர்வுடன் அவர்கள் தொண்டாற்றுகின்றார்கள். அவ்வாறே பள்ளிக் கூடங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் படிக்கின்ற இளைஞர்கள், மாணவ, மாணவிகள், குழந்தைகள் ஆகிய அனைவரும் ஓர் உணர்வுடன் தொண்டாற்றுகின்றனர். எனவே எங்கேயாவது ஏதேனும் சிறிய குறைகள், பலவீனங்கள் தென்பட்டாலும் கூட அதை கண்டும் காணமல் பொறுத்துக் இருங்கள்.

விருந்தினர் உபசரிப்பில் மிக முக்கிய துறை உணவு சமைப்பதாகும். உணவு சமைப்பவர்கள் நல்ல உணவை சமைக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ் விருந்தினர்கள் இது பற்றி குற்றஞ்சாட்ட மாட்டார்கள் என்று நான் நம்புகின்றேன். அவ்வாறு அவர்கள் குற்றஞ்சாட்டினாலும் அது அவர்களது ஆகுமான குற்றச்சாட்டாகவே இருக்கும். குற்றஞ்சாட்டுவதும் கூட கோபமாக அல்லாமல் ஏற்பாட்டாளர்க மென்மையுடனும் அன்புடனும் இந்த குறை உள்ளது என்று கவனமூட்டவும்.

ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் இதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இஸ்லாத்தின் சிறந்த பண்புகளில் இதுவும் ஒன்றாகும். அதாவது ஒரு நம்பிக்கையாளர் வீணான விஷயங்களை பேசுவதிலிருந்து விலகி இருக்க வேண்டும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த ஆண்டு மாநாட்டை அல்லாஹ்விற்கே உரிய கலப்பற்ற மாநாடாக ஆக்கி இருக்கும் போது நாம் எல்லா விதமான வீணான விஷயங்களிலிருந்தும், நேரத்தை வீணாக கழிப்பதிலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும். மாநாட்டின் நிகழ்ச்சிகளை கவனமாக கேட்க வேண்டும்.

இன்றைய உலக சூழலில் குழந்தைகளிடத்திலும், இளைஞர்களிடத்திலும் மார்க்க உணர்வை ஏற்படுத்துவது, மேலும் அதனோடு இணைப்பது பெற்றோர்களின் முக்கியமான மற்றும் மிகப்பெரிய பணியாகும். இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு தாயும், தந்தையும் இதற்காக முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் இதற்கான நற்பாக்கியத்தை அனைவருக்கும் வழங்குவானாக.

தர்பிய்யத் தொடர்பாகவும், மார்க்கத்தோடு ஒன்றிணைப்பதற்கும் மிக முக்கியமான விஷயம் இறை வணக்கமாகும். இதனையும் கடைபிடிக்க வேண்டும். உங்களது குழந்தைகளையும் தொழுகையின் நேரத்தில் உங்களுடன் அழைத்து வாருங்கள். பள்ளியிலிருந்து வீடு தொலைவில் இருக்குமென்றால் வீடுகளில் ஜமாஅத்தாக தொழுதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறே பணி செய்பவர்களும் தொழுகையை பேணுங்கள். நமக்கு தொழுகையின் பக்கம் கவனம் இல்லையென்றால் நமது அனைத்து பணிகளும் வீணானவையாகும்.

ஏற்பாடுகள் தொடர்பாகவும் சில விஷயங்களை நான் கூற விரும்புகிறேன். எவர் தமது வண்டிகளில் வருகின்றார்களோ அவர்கள் ஏற்பாட்டாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். ஃபஸல் பள்ளிவாசலில் தொழ வரக்கூடிய விருந்தினர்களும் தமது வண்டியை அண்டை அயலாலரின் வழியை அடைக்கும் விதத்தில் நிறுத்தாதீர்கள். அவர்களது வீட்டுன் வழியை அடைக்க வேண்டாம். அவர்களுக்கு கஷ்டம் ஏற்படக்கூடாது.

ஏற்பாடுகள் தொர்பாக தூய்மை என்ற துறையும் உள்ளது. இதன் பக்கமும் குறிப்பான கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. நான் எப்போதும் நினைவூட்டுகின்றேன். தூய்மையை மேற்கொள்வது ஈமானின் ஒரு பங்காகும். இதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். விருந்தினர்கள் குளிக்கும் அறை மற்றும் டாய்லட்டை பயன்படுத்தும் போது அதை சுத்தப்படுத்தி விட்டு வர வேண்டும். அவ்வாறே வீதிகளில் கலாஸ் அல்லது கவர் கிடப்பதைக் கண்டால் அதை எடுத்து குப்பைத் தொட்டியில் போடுங்கள்.

பிறகு பாதுகாப்பு விஷயங்கள் தொடர்பாக தமது சுற்றுப் புறத்தில் குறிப்பான கவனம் செலுத்துங்கள். மாநாட்டுத் திடலுக்கு உள்ளேயும், வெளியேயும் தீங்கு விளைவிப்பவர்களால் தீங்கு விளைவிக்கலாம். இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். சந்தேகத்திற்கிடமான பொருள் கண்டால் அல்லது சந்தேகத்திற்குரிய செயலை எவராவது செய்வதைக் கண்டால் உடனே சம்பந்தப்பட்ட அருகில் டியூட்டி கொடுக்கின்றவர்களிடம் தகவல் கொடுக்கவும். பெண்களும் கவனமாக மாநாட்டை செவியேற்க வேண்டும். மேலும் பணி செய்யும் பெண்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அல்லாஹ் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு வாரிசாக்குவானாக.

**மொழியாக்கம் : முஅல்லிம் அ.கலீல் அஹ்மது**